RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-354 | 21 டிசம்பர் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ராஜஸ்தான் ஜெய்ப்பூரில் ரசாயன டேங்கர் மீது லாரி மோதி விபத்து 5 பேர் உயிரிழப்பு

ஜெய்ப்பூர், டிச.21

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பெட்ரோல் பங்க் அருகில் நின்றிருந்த ரசாயனம் ஏற்றிவந்த டேங்கர் வாகனத்தின் மீது லாரி ஒன்று மோதியதில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 5 பேர் பலியாகினர்.



விபத்து குறித்து போலீஸ் தரப்பில், "ஜெய்ப்பூர் அஜ்மீர் நெடுஞ்சாலையில் வெள்ளிக்கிழமை அதிகாலை பெட்ரோல் பங்க் ஒன்றின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எல்பிஜி டேங்கர் மீது லாரி ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. டேங்கரில் ரசாயனம் இருந்ததால் அதன் மீது லாரி மோதிய வேகத்தில் தீ பிடித்தது. டேங்கர், லாரியில் பிடித்த தீ அருகில் இருந்த பெட்ரோல் பங்க்கும் மளமள வெனப் பரவி பெரும் தீ விபத்தாக மாறியது.

இதில் 5 பேர் பலியாகினர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான் சிங் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தில், பெட்ரோல் பங்க்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல்வேறு வாகனங்களும் தீ பற்றி எரிந்து சேதமடைந்தன.

விபத்து குறித்து தகவல் கிடைத்ததும், 20 தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க கடுமையான முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க போராடிக் கொண்டிருக்கையில் பெட்ரோல் பங்கில் இருந்து பெரிய அளவிலான தீப்பிழம்புகள் வெளியேறுவதைக் காண முடிந்ததாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் ஊடகப் பேட்டிகளில் தெரிவித்துள்ளனர்.

## மக்களவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு அவைக்கு வெளியே காங்கிரஸ், பாஜக எம்பிக்கள் ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி, டிச.21

அம்பேத்கர் குறித்து அமித் ஷா பேசிய பேச்சுக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே எதிர்க்கட்சிகள் இன்றும் ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில், மக்களவை இன்று காலை கூடிய உடனேயே தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

அம்பேத்கர் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த 17ம் தேதி பேசிய பேச்சுக்கு அவர் மன்னிப்பு கேட்க வேண்டும், அவர் பதவி விலக வேண்டும் இல்லாவிட்டால் அவரை பிரதமர் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், அம்பேத்கரின் புகைப்படத்தை கைகளில் ஏந்தியவாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் எம்பி பிரியங்கா காந்தி வத்ரா உள்ளிட்ட இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் கலந்துகொண்டனர்.

இதேபோல், பாஜக எம்பிக்களும் வேறு ஒரு இடத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு போராடினர்.

இந்த போராட்டங்களைத் தொடர்ந்து காலை 11 மணிக்கு மக்களவை கூடியது. பிரதமர் நரேந்திர மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் இதில் பங் கேற்றனர். தேசிய கீதம் இசைக்கப்பட்டு அவை நடவடிக்கை தொடங்க இருந்த நிலையில் எதிர்க் கட்சி எம்பிக்கள் அமித்ஷாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பத் தொடங்கி னர். உடனடியாக, அவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் படுவதாகக் கூறி சபாநாயகர் ஓம் பிர்லா அவையை ஒத்தி வைத்தார.

இதேபோல், மாநிலங்களவை கூடியதும் அங்கும் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அமளியில் ஈடுபட்டதால் அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர் அறிவித்தார்.

## விசாரணை கைதிகளுக்கு அவசரகால விடுப்பு: வழிகாட்டு விதிகளை உருவாக்க அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, டிச.21

விசாரணை கைதிகளுக்கு சிறைத் துறை அதிகாரிகளே அவசரகால விடுப்பு வழங்கும் வகையில் வழிகாட்டு விதிகளை வகுக்குமாறு தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சென்னை புழல் சிறையில் விசாரணை கைதியாக உள்ளவர் சதீஷ். இவரது தந்தை அருள் தாஸ், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ''எனது மனைவி இறந்துவிட்டதால், இறுதி சடங்கில் பங்கேற்க எனது மகனுக்கு அவசரகால விடுப்பு வழங்க வேண்டும்'' என்று கோரியிருந்தார்.

நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், எம்.ஜோதிராமன் அமர்வில் இந்த மனு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ்.நதியா, ''மனுதாரரின் ஒரே மகன் என்ற அடிப்படையில் அவரது தாய்க்கு இறுதி சடங்குகளை மேற்கொள்ள, சிறையில் உள்ள சதீஷுக்கு அவசரகால விடுப்பு வழங்க வேண்டும்'' என்றார்.

சிறைத் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.முனியப்பராஜ், ''மற்ற கைதிகள்போல விசாரணை கைதிகளுக்கு சிறைத்துறை அதிகாரிகள் அவசரகால விடுப்பு வழங்க சட்டத்தில் இடமில்லை. அவர்கள் விசாரணை நீதிமன்றங்களை அணுகித்தான் ஜாமீன் பெற வேண்டும்'' என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள் கூறியதாவது: நீதிமன்ற விடுமுறை நாட்களில் விசாரணை கைதியின் தாயோ, தந்தையோ இறந்தால், இறுதி சடங்கில் எப்படி பங்கேற்க முடியும்? எனவே, சிறையில் உள்ள விசாரணை கைதியின் தாய் அல்லது தந்தை உயிரிழக்கும் பட்சத்தில், சிறைத் துறை அதிகாரிகளே உடனடியாக நிபந்தனைகளுடன் அவசரகால விடுப்பு வழங்கும் வகையில் விதிகளை தமிழக அரசு வகுக்க வேண்டும். இவ்வாறு உத்தரவிட்ட நீதிபதிகள், மனுதாரர் அவரது தாயின் இறுதி சடங்கில் பங்கேற்கும் வகையில் விடுப்பு வழங்கி உத்தரவிட்டுள்ளனர்.

## அண்ணாமலை பல்கலை. துணைவேந்தர் நியமன விவகாரம் ஆளுநரின் குற்றச்சாட்டுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் பதில்

சென்னை, டிச.21

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனம் தொடர்பாக தேடுதல் குழு அமைத்து அரசு எடுத்த நடவடிக்கை மாநில அரசு பல்கலைக்கழக சட்டப்பிரிவுகளுக்கு உட்பட்டு எடுக்கப்பட்ட முடிவு என்று ஆளுநரின் குற்றச்சாட்டுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பதிலளித்துள்ளார்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக புதிய துணை வேந்தரை தேர்வுசெய்வதற்காக தமிழக அரசு அமைத்துள்ள தேடுதல் குழுவில் யுஜிசி பிரதிநிதி இடம்பெறவில்லை என்றும் இது யுஜிசி விதிமுறைகளுக்கும் உச்சநீதிமன்ற உத்தரவுக்கும் முரணானது என்று பல்கலைக்கழக வேந்தரான தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி குற்றம் சாட்டியிருந்தார். அதோடு யுஜிசி பிரதிநிதியுடன் கூடிய தேடுதல் குழுவை நியமித்து அறிவிப்பு வெளியிட வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு அறிவுரை வழங்கியிருந்தார். இந்நிலையில், ஆளுநரின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் உயர்கல்வித் துறை அமைச்சரும், பல்கலைக்கழக இணைவேந்தருமான கோவி.செழியன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மாநில அரசு பல்கலைக்கழகங்களின் சட்டப்பிரிவுகளின் படி அமைக்கப்பட்ட தேடுதல் குழுவினால் பரிந்துரை செய்யப்படும் 3 நபர்களில் ஒருவரை சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக வேந்தரான ஆளுநர் நியமனம் செய்வார். இதுவரை இந்த நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது. அதன்படியே தமிழக அரசால் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தர்களை தேர்வுசெய்வதற்கு பல்கலைக் கழகங்களின் சட்ட விதிகளின்படி 3 பேர் அடங்கிய தேடுதல் குழு அமைத்து அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆனால், தேடுதல் குழுவில் 4வது நபராக யுஜிசி உறுப்பினரின் பிரதிநிதி இடம் பெற வேண்டும் என்று தமிழக ஆளுநர் முதல்வருக்கு கடிதம் வாயிலாக வலியுறுத்தினார்.



பல்கலைக்கழக துணைவேந்தரை தேர்வுசெய்ய அமைக்கப்படும் தேடுதல் குழுவை அறிவிக்கையாக வெளியிடுமாறு ஆளுநர் அரசுக்கு பரிந்துரை மட்டுமே செய்ய முடியுமே தவிர, தன்னிச்சையாக தேடுதல் குழுவை அமைத்து அறிவிக்கை வெளியிட ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. மேலும், ஆளுநரின் அறிவிக்கைகளை எதிர்த்து அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு பல்கலைக்கழகங்களின் சட்ட விதிகளின்படி, துணைவேந்தரை தேர்வுசெய்ய அமைக்கப்படும் தேடுதல் குழுவில் ஆளுநரின் பிரதிநிதி, அரசின் பிரதிநிதி, பல்கலைக்கழக செனட் பிரதிநிதி ஆகிய 3 பேர் மட்டுமே இடம் பெற முடியும். கல்வி என்பது பொது பட்டியலில் வருவதால் மாநில அரசு யுஜிசியின் நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டிய கட்டாயமில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. தற்போது சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தரை நியமிக்க 3 பேர் அடங்கிய தேடுதல் குழு அமைத்து அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு இதுதொடர்பான அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டது. இதில் எந்த வித விதிமீறல்களும் இல்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை செயல்பட விடாமல் பல்வேறு இடையூறுகளை பல வகையிலும் ஆளுநர் செய்து வருகிறார். துணைவேந்தர் தேடுதல் குழு அமைப்பு விவகாரத்தில் ஆளுநரின் அனுப்பியுள்ள கடிதம் அதன் ஒரு பகுதி தான்.

பல்வேறு மாநிலங்களைக் கொண்ட இந்தியாவில் அந்தந்த மாநில தேவைகளுக்கு ஏற்ப உயர்கல்வி அமைப்பை அமைத்துக்கொள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு அதிகாரமும் உரிமையும் உள்ளது. பல்கலைக்கழக வேந்தர் என்ற பதவிவழி பொறுப்பை பயன்படுத்தி அரசு பல்கலைக் கழக சட்டப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகளை முடக்குவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல.

ஆளுநர் சட்டத்தை தவறாக கையில் எடுத்துக்கொண்டு செயல்முறைகள் வெளியிடும் போக்கை அரசு கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது. பல பல்கலைக்கழகங்களில் பல மாதங்களாக துணைவேந்தர்கள் இல்லாமல் செயல்படுவதை பற்றி சிறிதும் கவலைப்படாமல் ஆளுநர் நடந்து கொள்வது மாணவர்கள் நலனுக்கு எதிரானது. மாணவர்களின் நலன் கருதி மாநில ஆளுநர் பல்கலைக்கழக சட்டத்துக்கு உட்பட்டு அமைக்கப்பட்ட தேடுதல் குழுவுக்கு ஒப்புதல் அளிப்பதே அவர் வகிக்கும் பதவிக்கு அழகு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, சட்டப்பேரவை மூலம் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது ஆளுநரின் கடமை. இனியாவது ஆளுநர் தனது செயல்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## காங்கிரஸ் எம்.எல்.ஏ மனைவி ஊராட்சிமன்ற தலைவராக பதவியேற்க ஆட்சியர் அனுமதி இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



சிவகங்கை, டிச.21

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே சங்கராபுரம் ஊராட்சிமன்ற தலைவராக காங்கிரஸ் எம்.எல்.ஏ மாங்குடியின் மனைவி தேவி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து பிரியதர்ஷினி என்பவர் வழக்கு தொடர்ந்த நிலையில் அவருக்கு சாதகமாக வந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரியதர்ஷினி பதவியேற்றார்.




இந்தநிலையில் மீண்டும் உச்ச நீதிமன்றம் சென்று மேல் முறையீடு செய்த வழக்கில் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரமே ஆஜரான நிலையில் மங்குடி மனைவி தேவி வெற்றி பெற்றதே செல்லும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

தீர்ப்பு நகலை சிவகங்கை ஆட்சியர் ஆஷா அஜித்திடம் மாங்குடி மனைவி தேவி வழங்கிய நிலையில் ஆட்சியர் பதவியேற்க அனுமதி அளித்தார். இதனையடுத்து ஆட்சியர் அலுவலக வாயிலிலேயே காங்கிரஸ் கட்சியினர் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். காரைக்குடி எம்எல்ஏ மாங்குடி மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி, முன்னாள் மாவட்ட தலைவர் ராஜரத்தினம் மாநில மகளிர் அணி வித்தியா கணபதி இளைஞர் காங்கிரஸ் ராஜு கண்ணா சிறுபான்மை பிரிவு சையது இப்ராஹிம் கவுன்சிலர் விஜயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஜனவரி 6ல் தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர்... ஆளுநர் உரையுடன் தொடக்கம்!

சென்னை, டிச.21

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும் ஜனவரி 6, 2025 அன்று தொடங்கவுள்ளது என்று சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார். இதுதொடர்பாக சென்னையில் உள்ள தலைமை செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், மாண்புமிகு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் இந்திய அரசியலமைப்பு சட்டம் 174, 1ன் கீழ் தமிழக சட்டமன்றத்தை தலைமை செயலகத்தில் அமைந்துள்ள பேரவை கூடத்தில் வரும் ஜனவரி 6ஆம் தேதி கூட்டியுள்ளார்.



அன்றைய தினம் இந்திய அரசியலமைப்பு சட்டம் 176, 1ன் கீழ் காலை 9 மணிக்கு ஆளுநர் உரை நிகழ்த்தவுள்ளார். இந்த கூட்டத்தொடர் எத்தனை நாட்கள் நடைபெறும் என்பதை அலுவல் ஆய்வு குழு தான் கூடி முடிவு செய்யும். இந்த குழு எடுக்கும் முடிவின் படி, சட்டப்பேரவை கூட்டத்தொடரை நடத்துவதற்கு தான் சபாநாயகருக்கு உரிமை உள்ளது என்றார். ஒரே நாடு ஒரே தேர்தல் விவகாரம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு, இதுதொடர்பாக நீங்கள் முதலமைச்சரிடம் தான் கேட்க வேண்டும்.

அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தால் அதை விவாதித்து நடவடிக்கைகள் எடுக்க சட்டமன்றம் தயாராக இருக்கிறது என்று கூறினார். 2024ஆம் ஆண்டின் முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் ஆளுநர் தனது உரையை முழுமையாக வாசிக்கவில்லை. இதேபோல் நடப்பாண்டும் நடைபெற வாய்ப்புள்ளது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அதை நீங்கள் ஆளுநரிடம்தான் கேட்க வேண்டும். கடந்த முறை முதல் பக்கத்தையும், கடைசி பக்கத்தையும் வாசித்தார்.

இம்முறை தனது உரையை ஆளுநர் ஆர்.என்.ரவி முழுமையாக வாசிப்பார் என்று நம்புகிறோம் என்றார். சட்டப்பேரவை கூட்டத்தொடர் 100 நாட்கள் நடத்தப்படும் என்று திமுக தனது தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்தது. ஆனால் ஒருசில நாட்கள் மட்டுமே கூட்டத்தொடர் நடத்தும் சூழல் காணப்படுகிறது. இதுபற்றிய கேள்விக்கு, இந்த விஷயம் தொடர்பாக சட்டமன்றத்தில் ஏற்கனவே கூறியுள்ளேன்.

2011 முதல் 2021 வரையிலான 10 ஆண்டுகளில் குளிர்கால கூட்டத்தொடர் வெறும் 2 நாட்கள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. அதுவும் விவாதம் இன்றியே நடத்தப்பட்டன.

ஆனால் இந்த ஆட்சியில் விவாதத்தை எடுத்து கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார். பல்வேறு இயற்கை பேரிடர்கள் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. இருப்பினும் 100 நாட்கள் சட்டப்பேரவை கூட்டத்தொடரை நடத்துவதை இலக்காக நிர்ணயம் செய்து செயல்பட்டு வருகிறோம் என்று அப்பாவு தெரிவித்தார்.

மாலை தந்தி



# பெண் ஆய்வாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்க கோரி சிபிஎம், மாதர் சங்கம் போராட்டம்






சிவகங்கை டிச21

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பகுதியைச் சேர்ந்த 14 வயது மாணவிக்கு குளிர் பானத்தில் மயக்க மருந்து கொடுத்து ஒரு கும்பல் பாலியல் பலாத்காரம் செய்ததாக மாணவியின் தாய் மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காத மானாமதுரை மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் சித்திரைச் செல்வி கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் திருப்புவனத்தில் போராட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் ஒருவரை கைது செய்யப்பட்ட நிலையில் மற்றவர்களையும் கைது செய்ய கோரி போராட்டம் நடைபெற்றது.

மேலும் ஆய்வாளர் சித்திரைச் செல்வி மீது பல்வேறு புகார்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்றும் இதில் காவல்துறை உயர் அதிகாரிகளை அதை ஒத்துக் கொள்கின்றனர் என்றும் போராட்டத்தில் கோஷமிட்டனர்.

# வேலூர் ஆட்சியரகத்தில் எருது விடும் விழா குறித்து ஆட்சியர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்




வேலூர் டிச21

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் எருது விடும் விழா 2025ல், நடத்த அனுமதி கோரும் விண்ணப்பங்கள் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ள இணைய தளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்து சார்நிலை அலுவலர்கள் மற்றும் எருது விடும் விழா, நடத்தும் விழா குழுவினருடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது.


இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வி.முத்தையன், வேலூர் ஆர்.டி.ஒ. பாலசுப்பிரமணியன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பரணிதரன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு. அந்துவன், துணை காவல் கண்காணிப்பாளர்கள் பழனி (காட்பாடி), சாரதி (அணைக்கட்டு), துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் விழா குழுவினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்



பல்லாவரம், டிச.21

நாடாளுமன்றத்தில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரை இழிவு படுத்தி பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக மண்டலத் தலைவர் பகுதி கழக செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளருமான இ.கருணாநிதி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளரும் தமிழ்நாடு பாடநூல் நிறுவன தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் பங்கேற்று அண்ணல் அம்பேத்கர் திருவுருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பிறகு கண்டன மேடையில் கண்டன முழக்கமிட்டு அமித்ஷாவை கண்டித்து சிறப்புரை ஆற்றினார்கள் ஆர்ப்பாட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் என 3000க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டார்கள்.



கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி பேரூராட்சிக்குட்பட்ட திட்டுவிளை பேருந்துநிலையத்தில் பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.



சட்ட மேதை அம்பேத்கர் பற்றி அவதூறாக பேசிய மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து நேற்று இராமநாதபுரம் மாவட்டம் திமுக மாவட்ட செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் பரிந்துரை படி நயினார் கோவில் திமுக கிளை கழகத்தின் கிளை செயலாளர் அரசுமணி தலைமையில் மத்திய அரசு தபால் நிலையம் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கருமலையான் முகேஷ் சந்தோஷ் குமார், இளங்கோ, ஸ்ரீதரன் உட்பட திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்

# சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் கள ஆய்வு





சிவகங்கை டிச21

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், கள ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மக்கள் நலத்திட்டங்கள் மட்டுமன்றி பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திடும் பொருட்டு, சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதில், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 202122 முதல் 202425ஆம் நிதியாண்டுகளின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, 202122ஆம் நிதியாண்டிற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.319 இலட்சம் மதிப்பீட்டில் செக்கடி ஊரணி புனரமைத்தல் பணி, நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டுதல் பணியும், தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.61.24 இலட்சம் மதிப்பீட்டில் பொதுக்கழிப்பறை மற்றும் சமுதாயக் கழிப்பறை கட்டுதல் பணிகளும்,

15 வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பகிர்மானக் குழாய்கள், வளமீட்பு மையம், வார்டு எண் 11ல் நகர்ப்புற சுகாதாரமற்றும் ஆரோக்கிய மையம் மற்றும் சாலைகள் அமைக்கும் பணிகளும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ரூ.84.44 இலட்சம் மதிப்பீட்டில் சாலையோர வியாபாரிகளுக்கு தள்ளு வண்டிகள் வழங்கியும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.57.50 இலட்சம் மதிப்பீட்டில் ஊரணி புனரமைத்தல் மற்றும் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்கும் பணிகளும்,

2022-23 ஆம் நிதியாண்டிற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.779 இலட்சம் மதிப்பீட்டில் செட்டி ஊரணி, குண்டூரணி, பேருந்து நிலையம் புனரமைத்தல் மற்றும் புதிதாக வாரச்சந்தை அமைக்கும் பணிகளும், தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.43 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் வைக்கும் அறை கட்டிட பணி, 15 வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.116.98 இலட்சம் மதிப்பீட்டில் லிசிகூஷி மற்றும் ஙிளிகூஷி வாகனங்கள் வாங்குதல், நகர்ப்புற காடுகள் மற்றும் தார் சாலைகள் அமைக்கும் பணிகளும், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.208 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் அமைக்கும் பணிகளும், அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பூங்கா அமைக்கும் பணிகளும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.31.20 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிகளும், 202324ஆம் நிதியாண்டிற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.554 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் மற்றும் புதிதாக தினசரி சந்தை அமைக்கும் பணிகளும், 15 வது மானிய நிதிக் குழு திட்டத்தின் கீழ் ரூ.123 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் மற்றும் வார்டு எண் 18ல் நகர்ப்புற சுகாதார மைய கட்டிடம் அமைக்கும் பணிகளும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் நோயாளிகளுடன் கூடிய பாதுகாவலர் தங்குவதற்கு கட்டிடம் கட்டும் பணிகளும், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் செயலற்ற கணக்கு மற்றும் வட்டி நிதி திட்டத்தின் கீழ் ரூ.558 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளும், உள்கட்டமைப்பு பணிகள் திட்டத்தின் கீழ் ரூ.55.50 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை கட்டிடம் கட்டுவதற்கான பணிகளும், பராமரிப்பு பணிகள் திட்டத்தின் கீழ் ரூ.43.20 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டிடங்கள் பராமரிப்பு பணிகளும், 202425 ஆம் ஆண்டிற்கென கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டுதிட்டத்தின் கீழ் ரூ.194 இலட்சம் மதிப்பீட்டில் மாப்பிள்ளை துரை ஊரணி மற்றும் அய்யனார் ஊரணி புனரமைத்தல், புதிதாக பூங்கா மற்றும் வணிக வளாகம் ஆகியவைகளின் கட்டுமானப் பணிகளும், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் ரூ.03.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொதுக் கழிப்பறை பராமரிப்பு பணிகளும் என 67 வளர்ச்சி திட்டப் பணிகள் ரூ.34.47 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு நடைபெற்று வரும் பணிகள் தொடர்பாக, குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள், பேருந்து நிலைய புனரமைப்பு பணிகள் மற்றும் பொதுகழிப்பறை கட்டிட பராமரிப்பு பணிகள், வணிக வளாகம் கட்டுமானப் பணிகள், மாவட்ட நூலக வளாகத்தில் கூடுதல் கட்டிட கட்டுமானப் பணிகள் ஆகியன குறித்து களஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டது.

மேலும், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து தரமான முறையில் முடித்து, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, சிவ கங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், சிவகங்கை நகராட்சி ஆய்வாளர் கிருஷ்ணராம், நகராட்சி பொறியாளர் முத்து உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# சிவகங்கை சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்ற வாலிபர் சரமாரி வெட்டிக்கொலை





சிவகங்கை டிச21.

சிவகங்கை மாவட்டம் வாணியங்குடி பகுதியைச் சேர்ந்தவர் வெங்கடேசன்(21)இவர் சிவகங்கை பழைய மருத்துவமனை அம்பேத்கர் சிலை அருகே பூக்கடை வைத்துநடத்தி வந்தார். இவருக்கு திருமணம் ஆகவில்லை என்று கூறப்படுகிறது. வெங்கடேசன் தினந்தோறும் இரவு 10 மணி அளவில் கடையை அடைத்துவிட்டுதனது தாயுடன் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்வதை வழக்கமாக வைத்துள்ளார்

இந்த நிலையில் நேற்று முன்தினம் வழக்கம் போல் கடையை அடைத்து விட்டு வெங்கடேசன் மற்றும் அவரது தாயார் இருவரும் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தனர். அவர்கள் வாணியங்குடி ஆர்ச் அருகே சென்றபோது காரில் வந்த மர்ம கும்பல் வெங்கடேசன் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை இடித்து தள்ளினர். பின்னர் காரில் இருந்து இறங்கிய கும்பல் வெங்கடேசன் மற்றும் அவரது தாயாரை சராமாரியாக வெட்டினர். இதில் வெங்கடேசன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவரின் தாயார் லேசான காயங்களுடன் உயிர் தப்பினார்.

இச்சம்பவம் குறித்து அறிந்த அக்கம் பக்கத்தினர் காவல்துறையினருக்கு தகவல் அளித்தனர். தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல் துறையினர் வெங்கடேசனின் உடலை கைப்பற்றி உடற்கூராய்விற்காக சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து வழக்கு பதிவு செய்த காவல்துறையினர் கொலையாளிகள் குறித்து விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர்.

சிவகங்கை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் வெளியில் செல்வதற்கு அஞ்சுகின்றனர். குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது இரும்பு கரம் கொண்டு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ரிஷிவந்தியம் ஒன்றிய அரசு மேல்நிலைப்பள்ளிக்கு விலையில்லா மிதிவண்டியை வழங்கிய எம்.எல்.ஏ.,





கள்ளக்குறிச்சி டிச.21

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் ஒன்றியம், பழைய சிறுவங்கூர் ஊராட்சி, சித்தேரிப்பட்டு பகுதியில் அமைந்துள்ள அரசு மேல்லைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பில் விலையில்லா மிதி வண்டிகளை வழங்கி, சிறப்புரையாற்றினார்கள்.

இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள், ஒன்றிய பெரும் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# சிவகங்கை அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கான திருக்குறள் வினாடி வினா முதல் நிலை போட்டி

சிவகங்கை, டிச.21

குமரிமுனையில் வானுயர்ந்து நிற்கும் ஐயன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவை முன்னிட்டு, மாநில அளவிலான திருக்குறள் வினாடி வினா போட்டியானது தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், விருதுநகர் மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்பில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக நடைபெறவுள்ளது.

அதன்படி, மாநில அளவிலான திருக்குறள் வினாடி வினா போட்டியின் முதல் நிலைப் போட்டியானது, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் வகையில், அந்தந்த மாவட்டங்களில் வருகின்ற 21.12.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும்



அனைத்து துறை / அனைத்து நிலை அலுவலர்கள், அரசு / அரசு உதவி பெறும், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வகை தனியார் பள்ளிகள் / கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரிய பெருமக்கள் ஆகியோர் பங்கேற்கவிருக்கும் திருக்குறள் முதல் நிலை வினாடி வினா போட்டியானது, வருகின்ற 21.12.2024 அன்று பிற்பகல் 2:00 மணியளவில் சிவகங்கை மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. மேலும், போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் நாளன்று பிற்பகல் 01:00 மணியளவில் போட்டி நடைபெறும் இடத்திற்கு வருகை புரிந்திருத்தல் வேண்டும்.

எனவே, திருக்குறள் வினாடி வினா போட்டியில் பங்கேற்க விரும்பும், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து துறை / அனைத்துநிலை அலுவலர்கள், அரசு /அரசு உதவி பெறும், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வகை தனியார் பள்ளிகள் / கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரிய பெருமக்கள் ஆகியோர் வருகின்ற 20.12.2024 அன்று மாலை 05.00 மணிக்குள் https://shorturl.at/WUo6h என்ற இணையதள முகவரியின் வாயிலாகவோ அல்லது குறிப்பிட்டுள்ள னிஸிநீஷீபீமீ ஐப் பயன்படுத்தி முன்பதிவு செய்து, திருக்குறள் வினாடி வினா போட்டியில் பங்கேற்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# தேனி மாவட்டம் போடியில் வட்டார வளர்ச்சி அலுவலரை கண்டித்து ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்கள் முற்றுகை போராட்டம்

தேனி. டிசம்பர் 21

தேனி மாவட்டம் போடி ஊராட்சிஒன்றிய அலுவலகத்தில் நேற்று மாதாந்திர சாதாரண ஒன்றிய பெருங்குழு கவுன்சிலர்கள் கூட்டம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சுதா மற்றும் துணைத் தலைவர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் மொத்தம் 40 தீர்மானங்கள் இடம்பெற்று இருந்த சூழ்நிலையில் ஒன்றிய கவுன்சிலர்கள் அனுமதிக்காததால் தீர்மானங்கள் நிறைவேற்றப் படவில்லை.மேலும் இந்த கூட்டத்தில் ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் ஐயப்பன் கூட்டத்தை புறக்கணித்த சூழ்நிலையில் கடந்த ஆறு மாத காலங்களாக ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து எந்த ஒரு வளர்ச்சி பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என



கூறி வட்டார வளர்ச்சி அலுவலர் ஐயப்பன் அவர்களை கண்டித்து ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ,துணைத் தலைவர் மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஐயப்பன் ஊராட்சி மன்றத்தை புறக்கணித்து தன்னிச்சையாக செயல்பட்டு மக்கள் வரிப்பணத்தை வீணடிப்பதாகவும் கூறி ஐயப்பன் மீது மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். இந்த முற்றுகை போராட்டதால் ஊராட்சிஒன்றிய அலுவலகத்தில் பரபரப்பு நிலவியது.

# பழனியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் படத்தை தீயிட்டு கொளுத்திய விசிகவினர்

பழனி, டிச.21

திண்டுக்கல் மாவட்டம் பழனி தலைமை தபால் நிலைய அலுவலகம் முன்பு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்பேத்கரை பற்றி தவறாக பேசியதை கண்டிக்கும் விதமாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விசிக கட்சியினர் அமித்ஷாவின் திருவுருவப்படத்தை தீயிட்டு கொளுத்தி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். மேலும் கட்சிக் கொடிகளை ஏந்தியவாறு பல்வேறு கோஷங்களை எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.

இந்நிகழ்வின் தலைமையாக நகர பொருளாளர் தமிழண்ணன் முன்னிலையாக மாவட்ட செயலாளர் திருவளவன் துணைச் செயலாளர் பாவேந்தன் செய்தி தொடர்பாளர் பொதினிவளவன்




தொகுதி செயலாளர் முத்தரசு நகர செயலாளர் மணவாளன் செயற்குழு உறுப்பினர் அன்பழகன் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களாக குமாரசாமி, வளவன்வாய்க்கால், வாஞ்சிநாதன், போர்கொடியேந்தி கார்த்திக், சிங்காரம் கார்த்தி, தமிழ்மண்ஆனந்தன், கார்த்திக்,

முத்து, ஜெயசீலன், பூமிநாதன், ஆதிவளவன், முத்துக்குமார், காட்டான் துரை, மாரிமுத்து, பெருமாள், தளபதி வள்ளி, பாலன், அருண், முரளி, ஈஸ்வரன், லோகநாதன், வெள்ளிமணி, மில்லர் மண்டேலா, கிள்ளிவளவன், ஒட்டன்சத்திரம் வடிவேல், ஆயைபிரபு, செந்தமிழன், மணிமுத்து, மாரிமுத்து, மருது, குள்ளமணி, மற்றும் மகளிர் அணியை சார்ந்த வீரமணி மகேஸ்வரி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன..





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொள்ளும் கன்னியாகுமரி மாவட்டம் திருவேணி சங்கமம் நடுக்கடலில் அமைந்திருக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சி முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் முதலமைச்சரின் செயலாளர் மரு.சண்முகம், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் செயலாளர் மன்கத் ராம் சர்மா, , நெடுஞ்சாலைகள் துறை அரசு செயலாளர் மரு.செல்வராஜ், நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் கார்த்திகேயன், செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராம், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் பி.சந்திரமோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் பலமாற்று பொன் இனங்களை வங்கியிடம் ஒப்படைப்படைத்த அமைச்சர்கள்

திண்டுக்கல், டிச.21

திண்டுக்கல் மாவட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தங்க முதலீட்டு திட்டத்தில் முதலீடு செய்யும் வகையில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின்

192 கிலோ 984 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களைபாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைப் படைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி. உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் இன்று (20.12.2024) ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா முன்னிலை யில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில், காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாட்டில் இல்லாத 192 கிலோ 984 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச் சர் பி.கே.சேகர்பாபு , செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட ஆலோசனைக் குழு கூட்ட முடிவுகளின்படி திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களை பிரித்தெடுத்து, பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கிட ஏதுவாக தமிழ்நாட்டை மூன்று மண்டலங்களாக பிரித்து ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜு, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள்



செல்வி ஆர்.மாலா, க.ரவிச்சந்திரபாபு ஆகியோர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் 23 திருக்கோயில்களில் பயன்பாடற்ற பொன் இனங்களை பிரித்து அதில் 13 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்கள் உருக்கி, 442 கிலோ 107 கிராம் எடையுள்ள சுத்த தங்க கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5.79 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப்பெற்று அந்தந்த திருக்கோயில்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 192 கிலோ 984 கிராம் எடையுள்ள பயன்பாடற்ற பொன் இனங்கள் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக சுமார் 1,000 கிலோ எடை கொண்ட பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யும்போது ஆண்டிற்கு ரூ.12.00 கோடி வட்டித் தொகையாக கிடைப்பதோடு, ரூ.700 கோடி மதிப்பிலான தங்க கட்டிகள் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு திருக்கோயில்களில் சொத்து மதிப்பும் உயர்வடைகின்ற அற்புதமான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்கள்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் பெயரில் 2007ஆம் ஆண்டு 191 கிலோ தங்கம் முதலீடு செய்யப்பட்டு அதன்மூலம் ஆண்டுக்கு ரூ.1.35 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப்பெற்று வருகிறது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலுள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட திருக்கோயில் அறங்காவலர்குழு தீர்மானத்தின் படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் வரப்பெற்றவுடன் நேர்காணல் நடத்தி எவ்வித தவறுக்கும் இடம் கொடாமல் தேர்வு செய்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி நேர்காணல் நடத்தப்பட்டு வரும் மார்ச் மாதம் இறுதிக்குள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்கிற்கு பணியாற்றி வரும் ஆசிரியர்களை ஏற்கனவே தேர்வு செய்யும்போது இந்து சமய அறநிலையத்துறையின் கல்விப் பிரிவின் விதிமுறைகளுக்குட்பட்டு தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆகவே அவர்களை பணி நிரந்தரம் செய்ய இயலாத நிலையில்தான் அவர்களுக்கான தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்கியுள்ளோம்.

திருக்கோயில் யானைகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் வனத்துறையின் மூலமாக அவ்வப்போது மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருவதோடு, கால்நடை மருத்துவர்களால் அறிவுறுத்தப்படும் உணவுகட்டுப்பாடும் கடைபிடிக்கப்படுகிறது. மாண்புமி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, 26 திருக்கோயில்களிலுள்ள 28 யானைகளை நல்ல முறையில் பராமரித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்திய வனத்துறை பாதுகாப்பு சட்டப்படி, புதிதாக யானையை வாங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை. முறையான அனைத்து அனுமதிகளையும் பெற்று தனது சொந்த பராமரிப்பில் யானைகளை வளர்த்து வருபவர்கள் திருக்கோயிலுக்கு யானையினை வழங்க முன் வந்தால் சட்டப்படி அதனை ஏற்றுக்கொள்வதற்கு துறை தயாராகவுள்ளது. அவை யானைகள் இல்லாத திருக்கோயில்களுக்கு வழங்கப்படும்.

பழனி திருக்கோயிலுக்கு புதிய ரோப்கார் அமைப்பது தொடர்பாக அறங்காவலர் குழு மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு சென்று அங்கு இயக்கப்படும் ரோப்கார் கட்டமைப்புகளை ஆய்வு செய்து வந்துள்ளனர். அதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று அறிவிக்கப்படும், என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பழனி சட்ட மன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், பழனி சார் ஆட்சியர் எஸ். கிஷன்குமார், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், இணை ஆணையர்கள் திருமதி கோ.செ.மங்கயர்க்கரசி, திருமதி இரா.வான்மதி, எஸ்.மாரிமுத்து, எம்.கார்த்தி, பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் திருமதி கே.திவ்யதேஜா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரிஷிவந்தியத்தில் சேமிப்புக் கிடங்கு கட்டிடத்தை திறந்து வைத்த எம்.எல்.ஏ.,

கள்ளக்குறிச்சி டிச21

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் சேமிப்புக் கிடங்கு கட்டிடத்தை திறந்து வைத்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் ஊராட்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் ரூபாய் 39.85 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய துணை வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் விதை சேமிப்பு கிடங்கு கட்டிடம் திறப்பு விழாவில் சிறப்பு அழைப் பாளராக கலந்து



கொண்டு, புதிய கட்டிடத்தை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு விதைப் பொருள்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கினார்.



இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள், ஒன்றிய பெரும் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சேர்ந்த அதிகாரிகள் அலுவலர்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் சின்னாளபட்டியில் ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்த அமைச்சர்

திண்டுக்கல், டிச.21

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஆய்வகம் மற்றும் அலுவலகம், சின்னாளபட்டி, வடக்குத் தெருவில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நாடக மேடை, செக்காபட்டியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நவீன கழிப்பறை கட்டடம் என மொத்தம் ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் , தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் செயல்படுத்தி வருகிறார். பொதுமக்கள் வாழ்க்கைக்கு தேவையான கல்வி, குடிநீர் வசதி, சாலை வசதி,



போக்குவரத்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றிட பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த திட்டங்களின் பயன்கள் கடைகோடி கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் , தனி மனிதனுக்கு மருத்துவம் மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் சின்னாளப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆய்வகம் மற்றும் அலுவலகம் கட்டப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு அவசர சிகிச்சைப் பிரிவு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இன்றையதினம் சின்னாளப்பட்டி பகுதியில் மொத்தம் ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆத்தூர் தொகுதியில் 2 கல்லூரிகள் தொடங்கப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதில் ஒரு கல்லூரி கட்டடம் முழுமையடையும் நிலையில் உள்ளது.

மக்கள் பிரச்சனைகளை தீர்க்கவும், நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றவும் தமிழ்நாடு அரசு சார்பில் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வருங்காலத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் ஆதரவு அளிக்க வேண்டும், என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு.பாஸ்கரன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி மகேஸ்வரி முருகேசன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா.சக்திவேல், உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்) ஆர்.ராஜா, சின்னாளப்பட்டி பேரூராட்சித் தலைவர் திருமதி இரா.பிரதீபா, பேரூராட்சி துணைத்தலைவர் திருமதி பா.ஆனந்தி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ரா. செல்வகுமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஆர்.ஆனந்தீஸ்வரி, மருத்துவ அலுவலர் மரு.என்.சிவக்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தி.சூரக்குடி ஊராட்சிக்குட்பட்ட திருவேலங்குடி கிராமத்தில் இன்று (19.12.2024) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 20232024ன் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய நூலக கட்டிடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, இந்திய தர நிர்ணய ஆணையம் மற்றும் பன்னாட்டு தர மேம்பாட்டு அமைப்பின் சார்பில், தி.சூரக்குடி ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள ISO தரச்சான்றிதழினை ஊராட்சி மன்றத்தலைவர்ஏஆர். முருகப்பன் அவர்களிடம் வழங்கினார். உடன் தேவகோட்டை சார் ஆட்சியர்ஆயுஷ் வெங்கட் வட்ஸ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன் மற்றும் இந்திய தர நிர்ணய ஆணையம் மற்றும் பன்னாட்டு தர மேம்பாட்டு அமைப்பினை சார்ந்தோர் உட்பட பலர் உள்ளனர்.

# தாம்பரம் பெருங்களத்தூர் வடக்கு, தாம்பரம் மேற்கு பகுதிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தாம்பரம், டிச.21

பாராளுமன்றத்தில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்க் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய அமைச்சர் அமித் ஷாவை கண்டித்து பெருங் களத்தூர் வடக்கு பகுதி தாம்பரம் மேற்கு பகுதி கழகங்களின் சார்பில் பகுதி கழக செயலாளர்கள் எஸ்.இந்திரன், டி. காமராஜ் தலைமையில் மேற்கு தாம்பரம் அண்ணா பேருந்து நிலையம் வளாகத்தில் அமைந்துள்ள



அம்பேத்கர் திரு உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்து. அதன்பின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

ஆர்ப்பாட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா கலந்து கொண்டு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கண்டன உரையாற்றினார். நிகழ்வில் மாநகர மேயர் க.வசந்தகுமாரி மற்றும் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கிய அமைச்சர்

சிவகங்கை, டிச.21

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்டம், சாக் கோட்டை ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட பகுதிகளில், தேவ கோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,தலைமையில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகளை பொது மக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்து, பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவிக்கையில்,



சிவகங்கை மாவட்டத் தில் உள்ள 445 ஊராட்சி களுக்குட்பட்ட அனைத்து கிராமப்புற பகுதிகளிலும் பொதுமக்களின் தேவைகள் அறிந்து, அதற்கான செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அனைத்து பகுதிகளும் மேம் படுத்தப்பட்டு வருகிறது. அதில், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 120 ஊராட்சி களிலும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழும், தங்களால் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள என்னுடைய தொகுதி மேம் பாட்டு நிதி மற்றும் எனது சொந்த நிதியின் கீழும் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப் படை கட்டமைப்புக்களும் மேம் படுத்துவதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தி.சூரக்குடி ஊராட்சியில், கடந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் 139 வளர்ச்சி பணிகள் ரூ.05.83 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினராகிய, என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும், இவ்வூராட்சிக் கென மொத்தம் 18 பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப் பிடதக்கதாகும்.

மேலும், இன்றையதினம் தி.சூரக்குடி ஊராட்சிக்குட்பட்ட நங்கம்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 20232024ன் கீழ் ரூ.07.00 மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ள புதிய பயணியர் நிழற்குடை மற்றும் அதே ஊராட் சிக்குட்பட்ட திருவேலங்குடி கிராமத்தில் சட்டமன்ற உறுப் பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 20232024ன் கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நூலக கட்டிடமும் என 02 பணிகளும், இதுதவிர, ஒ.சிறுவயல் ஊராட் சிக்குட்பட்ட ஒ.சிறுவயல் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 20222023ன் கீழ் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ள புதிய நியாய விலைக்கடை கட்டிடமும் என மொத் தம் ரூ.31.30 இலட்சம் மதிப் பீட்டிலான 03 முடிவுற்ற திட்ட பணிகள் இன்றையதினம் பொது மக்களின் பயன்பாட்டிற்கென அர்ப்பணிக்கப்படுகிறது.

இதுதவிர, இந்நிகழ்ச்சியின் வாயிலாக கூட்டுறவுத்துறையின் சார்பில் பள்ளத்தூர் பகுதியில் செயல்பட்டு வரும் 01 மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டிலான கட னுதவிகளையும், 4 12 விவசாயி களுக்கு ரூ.6,89,463/ மதிப்பீட் டிலான கேசிசி நெல் பயிர் கடனு தவிகளையும் என மொத்தம் ரூ.19,89,4637/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் தங்க ளது தேவைகளை அந்தந்த பகுதிக்குட்பட்ட மக்கள் பிரதிநி திகள் வாயிலாக எடுத்துரைத்து, தங்களின் வாழ்வாதார முன் னேற்றத்திற்கும் மற்றும் தங்க ளது ஊராட்சியின் மேம்பாட் டிற்கும் அடிப்படையாக பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரி வித்தார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் உடன் உள்ளார்.

# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

இராமநாதபுரம், டிச.21

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.





இக்கூட்டத்தில் வட்டார வாரியாக விவசாய சங்கப்பிரதிநிதிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளையும், கருத்துகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் பயிர் காப்பீடு, ஊரணி தூர் வாருதல், விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவது, கண்மாய்கள் தூர்வாருதல், தடுப்பணை கட்டுதல், பேருந்துகள் கூடுதலாக இயக்க வேண்டி, சாலைகள் சீரமைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை விவசாய சங்கப்பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர். விவசாயபிரதிநிதிகள் வைத்த கோரிக்கைகளுக்கு துறைவாரியாக அலுவலர்கள் பதிலளித்தனர்.

விவசாய சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசு விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் பல எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. மேலும் திட்டங்கள் ஒவ்வொன்றும் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு வேளாண்மைத்துறை அலுவலர்களை நியமிப்பதன் மூலம் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதுதவிர அவ்வப்போது விவசாயிகளின் கோரிக்கைகள் கேட்டறியும் பொருட்டு விவசாய சங்க பிரதிநிதிகளின் குறைகளை கேட்டு அவற்றிற்கு நிவர்த்தி செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

வைகை அணையில் இருந்து வரும் தண்ணீர் அனைத்து கால்வாய்களிலும் செல்லும் வகையில் வாய்க்கால்கள் மற்றும் கால்வாய்களை தூர்வாறும் பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. கிசான் விகாஸ் கடன் அட்டை அனைத்து விவசாயிகளுக்கும் கிடைத்திடும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மிளகாய் மற்றும் பருத்திக்கு வேளாண்மை விற்பனைத்துறை மூலம் சந்தைப் படுத்தவும், அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் குளிர்சாதன கிடங்குகளில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இருப்பு வைத்து தேவையான நேரத்தில் அதிக விலைக்கு விற்று இலாபம் பெற்றிட வேண்டுமெனவும் தெரிவித்ததோடு, மழை நன்கு பொழிந்து கண்மாய்களில் போதிய அளவு தண்ணீர் உள்ளது. வேளாண் அலுவலகங்களில் தேவையான இடுபொருட்கள் மற்றும் உரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு இரண்டிற்கும் மேற்பட்ட துறைகள் தொடா;பிருந்தால் உடனடியாக தொடா;புடைய அலுவலர்கள் ஆலோசனை செய்து விவசாயிகளின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. கோவிந்தராஜலு அவர்கள், கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் ஜூனு அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) (பொ) பாஸ்கரமணியன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கட்டபொம்மன் பெயரை இழிவுபடுத்தும் விதமாக வரும் சொர்க்கவாசல் படகாட்சிகளை நீக்க கோரி நாயுடு சமுதாயத்தினர் கோரிக்கை

மதுரை: டிச 21

மதுரை திருப்பரங்குன்றத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நாயுடு நாயக்கர் இளைஞர் அமைப்பினரின் ஆர்.ஜே.பாலாஜி நடித்த சொர்க்கவாசல் திரைப்படத்தில் கருணாஸ் கதாபாத்திரத்திற்கு கட்டபொம்மன் பெயரை வைத்து கட்டபொம்மனை இழிவு படுத்தும் விதமாக அமைக்கப் பட்ட காட்சிகளை ஓடிடீ தளத்தில் வெளியீடு உள்ள நிலையில் கட்டபொம்மன் பெயரை இழிவு படுத்தும் விதமான காட்சிகளை நீக்க வேண்டும் என நாயுடு சமுதாயத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். காட்சியை நீக்காவிட்டால் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்தப் படும் எனவும் தெரிவித் துள்ளனர்.





கடந்த நவம்பர் 29ஆம் தேதி ஆர் ஜே பாலாஜி நடித்த வெளி வந்த சொர்க்கவாசல் திரைப் படத்தில் நடிகர் கருணாசின் கதாபாத்திரத்திற்கு கட்டபொம் மன் என்ற பெயர் சூட்டப்பட் டுள்ளது. இந்நிலையில் சொர்க்கவாசல் திரைப்படத்தில் கட்டபொம்மன் என்ற பெயரில் கருணாஸ் நடிக்கும் கதாபாத் திரத்தில் சிறையில் மதுபானம் சப்ளை செய்வதாகும் திருநங் கையிடம் தவறாக நடந்து கொள் ளும் காட்சிகளிலும் கட்ட பொம்மன் பெயரை பயன்படுத் துவதால் வீரபாண்டிய கட்ட பொம்மனின் பெயரை இழிவு படுத்தும் விதமாக எடுக்கப்பட்ட காட்சிகள் தங்களது சமுதாய மக்களிடையே வேதனையை ஏற்படுத்தி உள்ளதாகவும் எனவே கட்டபொம்மன் கதா பாத்திரத்தில் வரும் காட்சி களை நீக்க வேண்டும் சொர்க்க வாசல் திரைப்படத்தை திரை யரங்குகளிலும் ஓடிடி தளத்திலும் வெளியாவதை தடுத்து நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.மேலும் இது சம்பந்தமாக திரைப்படத்தை தடை செய்ய வலியுறுத்தி மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருப்பதாகவும் தெரிவித்தனர்.

# தேனியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தேனி, டிச.21

தேனி ஒருங்கிணைந்த மாவட்ட ஆதித்தமிழர் பேரவை சார்பில் அம்பேத்கரை இழிவு படுத்திய

உள்துறை அமைச்சர் அமித் ஷாவை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.தேனி வடக்கு மாவட்ட செயலாளர் மா.நீலக்கனலன் தலைமை தாங்கினார்.தேனி தெற்கு மாவட்ட செயலாளர் அம்பேத்கர் அர்ஜூன் முன்னிலை வகித்தார்.இந்நிகழ்வில் வடக்கு மாவட்ட தலைவர் செ. மாவீரன்,தெற்கு மாவட்ட தலைவர் அதியர் மணி,மாவட்ட தலைவர் சிவராமன், மாவட்ட துணை செயலாளர் ஈஸ்வரன், கம்பம் ஒன்றிய செயலாளர் முருகன் கடமலை மயிலை ஒன்றிய செயலாளர் மலைச்சாமி கம்பம் நகர செயலாளர் கண்ணன் தகவல் தொழில்நுட்ப மாநிலத் துணைச் செயலாளர்கள்நீல வானத்து நிலவன், வீபெ சுரேஷ் ,மாவட்ட நிதி செயலாளர் கா.சரிதா, மகளிர் அணியின் நிர்வாகிகள் பிரீத்தா,தேனி நகர செயலாளர் நாச்சியம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி இயல்பு மாமன்ற கூட்டம்

நாகர்கோவில், டிச.21


கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி இயல்பு மாமன்ற கூட்டம் மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடை பெற்றது.





மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலை வகித்தார். கூட்டத்தின் துவக்கம் மறைந்த முன் னாள் நகர்மன்ற உறுப்பினர் சகாயராஜ் அவர் களுக்கு மாமன்றம் சார்பாக இரங்கலையும் மற்றும் கிறிஸ் துமஸ், ஆங்கில புத்தாண்டு, பொங்கல் திருநாள் வாழ்த்து களையும் மேயர் கூறினார். மேலும் சாலை வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ,மழைநீர் ஓடை சீரமைத்தல் அங்கன்வாடி மையம் சீரமைத்தல், தொடக்கப் பள்ளிக்கூடங்கள் சீரமைத்தல் பற்றி விவாதிக்கபட்டது. துணை மேயர்,மண்டலத் தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மாநக ராட்சியின் துறைச்சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண் டனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் இசிசி ரோடு பகுதியில் இறந்து கிடந்த காட்டு பன்றியை வனத்துறைக்கு தெரிவிக்காமல் சமைத்த சாப்பிட்ட இசிசிரோடு, திருவள்ளுவர் நகர் பகுதியை சேர்ந்த கிருஷ்ணன்(65), செந்தில்குமார்(48), விஜயகுமார்(28) ஆகிய 3 பேரை வனத்துறை யினர் வன உயிரின சட்டப்படி கைது செய்து தலா ரூ. 20 ஆயிரம் அபராதம் விதித்து வழக்கு பதிவு செய்தனர்.



Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161